மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை (03 — 01 — 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 38

# இரண்டாம் கட்ட பேச்சுக்கள் இன்று நடக்கும்

# அரசத் தரப்பின் ஐவர் குழு ஹெலியில் வரும்!

## அரசியல் தலைமையகத்தில் 9 மணிக்கு பேச்சு ஆரம்பம்

### மாலையில் அரச குழு திரும்பும்

யாழ்ப்பாணம், ஜன. 3

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமைச் செயலகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

நண்பகலில் உணவு இடைவேளைக்காக பேச்சுக்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் தொடரும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மாலையில் பேச்சு முடிந்த கையோடு அரசுத் தரப்புக் குழுவினர் ஹெலிக்கொப்டரில் புறப்பட்டுச் செல்வர் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

இன்று இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் முடிவுற்றதும், இருதரப்பினரும் கூட்டறிக்கை விடுவார்களா என்பதையும்— கூட்டாக பத்திரிகையாளர்கள் மாநாடு நடத்தப்படுமா என்பதையும்—

ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

## புலிகள் தரப்பு குழுவுக்கு தமிழ்ச்செல்வன் தலைமை!

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள பேச்சுக்களில் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தலைமை வகிப்பார்.

அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர், திரு. கரிகாலன், தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர், திரு. ரவி, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோரும் இன்றைய பேச்சுக்களில் கலந்துகொள்வர். (ஐ-9)

### பாலபட்ட பெண்டி உட்பட

## முதல் கட்ட பேச்சுக்கு வந்த மூவர் இம்முறையும் வருவர்

பேச்சு நடத்துவதற்காக இன்று யாழ் வரும் அரச தரப்புக் குழுவில், மூவர் ஏற்கனவே முதலாம் கட்டப் பேச்சுகளுக்காக யாழ்ப்பாணம் வந்தவர்களாவர்.

ஜனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டியே இம்முறையும் அரச தரப்புக் குழுவுக்கு தலைமை வகிக்கிறார்.

கடந்த தடவை குழுவில் இடம் பெற்றிருந்த இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசிர்வாதம், கட்டடக் கலை நிபுணர் திரு. நவீன் குணரட்ன ஆகியோரும் இம்முறை அரச தரப்புச் குழுவில் இடம் பெறுகின்றனர். அவர்களுடன் படை அதிகாரிகள் இருவரும் அரசதரப்புக் குழுவில்இணைந்து வரவுள்ளனர்.

## அரசுத் தரப்புக் குழுவில் இருவர் படை அதிகாரிகள்

அரசுத் தரப்புக் குழுவில் இம்முறை முதல் தடவையாக இரு படை அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

பிரிகேடியர் ஏ. எல். சிறி பீரிஸ், கப்டன் பிரசன்னா ராஜரட்ன ஆகியோரே இவ்விரு அதிகாரிகளுமாவர்

பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களில் உள்ள இரண்டாம் பிரிவு அதிரடிப் படை அணியின் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் பீரிஸ், இராணுவத் தலைமையகத்தில் பீரங்கிப் படைக்குப் பொறுப்பான பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கப்டன் ராஜரட்ன கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லயனல் வரமாட்டார்!

கொழும்பு, ஜன. 3

கடந்த முறை — முதற்சுற்றுப் பேச்சுக்களில்—அரச தரப்பில் பங்குபற்றிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ, இம்முறை அரச தரப்புக் குழுவில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதற்கட்டப் பேச்சுக்களின் பின்னர், தம்மை அவதூறு செய்யும் விதத்தில் வடக்கில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் செய்திகள் வெளியிடப்பட்டதாக லயனல் பெர்னாண்டோ குற்றம் சாட்டியிருந்தது தெரிந்ததே. (உ)

## உயர்மட்ட மாநாட்டிலேயே அரச பிரதிநிதிகள் தெரிவு

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் பின்னரே, இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட அரசுத் தூதுக்குழுவை இன்று (செவ்வாயன்று) பேச்சு நடத்த யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு முடிவு செய்யப்பட்டது.

—இவ்வாறு நேற்றைய ''வீரகேசரி'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல் தரத்தில் உள்ள சிறீ பீரிஸும்—

கடற்படை சார்பில் கடற்படையின் நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளர் திறேனிஸும் அரசுக் குழுவில் இடம்பெறக் கூடும் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மோதல் தவிர்ப்பு அறிவிப்பு மாலையில்

யாழ்ப்பாணம், ஜனவரி 3

ஸ்ரீலங்கா அரசுத் தரப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இரண்டு படை அதிகாரிகள் உட்பட ஐவர் கொண்ட ஸ்ரீலங்கா அரசுத் தரப்புக் குழு பேச்சு நடத்துவதற்காக இன்று காலை ஹெலிக்கொப்டரில் யாழ்ப்பாணம் வந்து இறங்கும்.

இன்றைய பேச்சுக்களின் போது மோதல் தவிர்ப்புக்கு (Cessation of Hostilities) இணக்கம் காண்பது குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என்றும் —

பேச்சுக்களின் பின்னர் மாலையில் மோதல் தவிர்ப்பு பற்றிய அறிவிப்பு வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு — விடுதலைப் புலிகள் முதற்கட்டப் பேச்சுக்கள் ஒக்ரோபர் 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன என்பதும் —

ஒக்ரோபர் 24 ஆம் திகதி காலையில் இரண்டாம் கட்டப் பேச்சுக்காக அரசுத் தரப்பினர் கொழும்பிலிருந்து புறப்படுவதற்கு ஆறு மணி நேரத்துக்கு முன்னர், கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்கா கொல்லப்பட்டதை அடுத்து, இரண்டாம் கட்டப் பேச்சு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதும்தெரிந்தவையே.

அதன் பின்னர்—10 வாரங்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய பேச்சுக்களின் போது ஆராயப்படவிருக்கும் ஆறு அம்சங்கள்

இன்று நடைபெறும் பேச்சுக்களில் முக்கியமாக — தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தமாக— ஆறு விடயங்கள்குறித்து ஆராயப்படும்; அல்லது தொடர்ந்து ஆராய்வதற்கு இணக்கம் காணப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

★ மோதல் தவிர்ப்பு பிரகடனம்; தொடர்ந்து யுத்த நிறுத்தம் செய்தல்.

★ யாழ். குடாநாட்டுக்கும் பெரு நிலப்பரப்புக்கும் இடையில் மக்கள் போக்குவரத்துக்கு பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறத்தல்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குதல்.

★ குடாநாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்தல்.

★ வடக்கு – கிழக்கை புனரமைப்புச் செய்தல்.

★ கடல் வலயத் தடையை நீக்குதல்.

— இந்த ஆறு விடயங்களே பிரதானமாக ஆராயப்படவிருக்கின்றன.

மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்த நிறுத்தம் தொடர்பாக இணக்கம் காண்பதிலும் அது சம்பந்தமான வழிமுறைகளை தயாரிப்பதிலும் அரசுத் தரப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள படை அதிகாரி

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## அன்றாடப் பிரச்சினைகள் குறித்தே முதலில் பேசி தீர்வு காணப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 3

இன்று மீண்டும் ஆரம்பமாகும் அரசு – விடுதலைப் புலிகள் பேச்சுக்களின் போது –

தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்ப்பது குறித்தே முதலில் ஆராய்ந்து தீர்வு காணப்படும்.

அதன் பின்னரே இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து இரு தரப்பினரும் ஆராய்வார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் இந்த தகவலை வெளியிட்டன.

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 3

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க் கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)

முச்சந்தி முரளி



பல நாள் திருடன் [illegible] அம்பிடுவான் எண்டது சரி தானே பாருங்கோ...!

## பரந்தன்- வவுனியா வீதியை திருத்த 300 தார் பரல்கள்

### பாதுகாப்பு இணைப்பு குழு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 3

பரந்தனில் இருந்து தாண்டிக்குளம் வரையான கண்டி வீதியைத் திருத்துவதற்கு 300 தார் பரல்களை கொழும்பில் இருந்து எடுத்துச்செல்ல பாதுகாப்பு இணைப்புக் குழு யாழ் அரச அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது

வீதி திருத்த வேலைக்கு பயன்படுத்தும் இரண்டு ''ரோலர்'' வாகனங்களை கொண்டு வரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பரந்தனில் இருந்து தாண்டிக்குளம் வரையான கண்டி பிரதான வீதி போக்குவரத்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் திருட்டு நடத்திய நால்வர் குழு அகப்பட்டது!

### 2 லட்சம் ரூபாவும் மீட்பு

தென்மராட்சி ஜன. 3

கொழும்பிலிருந்து வரும் பயணிகளின் பொதிகளில் இருந்து கிளாலியில் வைத்து அடிக்கடி பணத்தை திருடி வந்த நால்வரை பளை காவல் துறையினர் கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்தனர்.

[illegible] துறையில் பயணி ஒருவரின் பொதியை அவருக்குத் தெரியாமல் எடுத்து பணத்தை அபகரிக்கும் முயற்சியில் இந்த நால்வரும் ஈடுபட்டிருந்த வேளை இவர்களை காவல் துறையினர் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்

இந்தத் திருடர்களிடம் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மீட்கப்பட்டதாக பளை காவல் துறையினர் தெரிவித்தனர். (அ—117)

## கப்பலில் ராணுவச் சீருடை: தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, ஜன. 3

கப்பல் ஒன்றில் எடுத்து வரப்பட்ட ராணுவ சீருடைகள் மற்றும் உபகரணங்கள் பலவற்றை கொழும்பு துறைமுக பொலீசார் கைப்பற்றியுள்ளனர்.

ஜேர்மன் பிரஜை ஒருவர் இவற்றை இலங்கைக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கப்பலிலிருந்து அந்த ராணுவ சீருடைகளையும் ஏனைய உபகரணங்களையும் எடுத்துச் செல்ல முயற்சித்த தமிழ் இளைஞர் ஒருவரையும் பொலீசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் நாகமவைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### விளையாட்டு வினையானது

## தீக்குச்சி மருந்தை வைத்து வெடித்த சிறுமி படுகாயம்

யாழ்ப்பாணம் ஜன. 3

குடைப்பிடியின் குழாயினுள் தீக்குச்சி மருந்தை அடைத்து வெடிக்க வைத்தசிறுமி, அது வெடித்து சிதறியதில் படுகாயமடைந்தார்.

கல்வியங்காட்டில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இராசதுரை சசிகுமாரி (வயது 13) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த சிறுமி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தீக்குச்சி அடைத்தகுழாயை அந்தச் சிறுமி கோடரியினால் அடித்து வெடிக்க வைத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ—15)

## தமிழக காங்கிரஸை மீறி தமிழ் மாநாட்டில் ராவ்!

சென்னை, ஜன. 3

தஞ்சாவூரில் நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் முடிவு செய்திருப்பதை அடுத்து —

அந்நிகழ்ச்சியை பகிஷ்கரிப்பது என அவரது இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாடு மாநில பிரிவு முடிவு செய்திருக்கிறது

கட்சியின் மாநிலத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

கட்சித் தலைவரும் பிரதமருமான நரசிம்மராவ், மாநாட்டில் கலந்து கொள்ள முடிவு செய்திருப்பது, தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும்—

தங்களது எதிர்ப்பைக் குறிக்கும் வகையில் மாநாட்டின் இறுதி நாளன்று தமிழக காங்கிரஸின் தலைமையகமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் கட்சிக் கொடி பறக்கவிடப்பட மாட்டாது என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

மாநாடு நடைபெறும்

( 5ஆம் பக்கம் பார்க்க)

### 1994 டிசம்பா மாதத்துக்குரிய

## தமிழீழ மீட்பு நிதிககடன் மீளப் பெறும் நூறு பேர்

தமிழீழ மீட்பு நிதிக்கு கடன் வழங்கி உதவியவர்களில்- சடந்த டிசம்பர் மாதக் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட- நூறு பேரின் கடன்பத்திர இலக்கங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை கடன் மீளளிப்புப் பெற தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், இதுவரை மீளளிப்பைப் பெறாதவர்கள் உரிய ஆவணங்களைக் கையளித்து எதிர்வரும்- தைப் பொங்கல் தினத்துக்கு அடுத்த நாள்- 16 ஆம் திகதி மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீளளிக்கப்படும் நேரமும் இடமும் பின்னர் அறிவிக்கப் படும் எனவும் தெரிவிக்கப் பட்டது.

1994 டிசம்பர் மாதத்துக்குரிய குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு பேரினதும் கடன் பத்திரங்களின் இலக்கங்கள் வருமாறு:—

நல்லூர்

பா/ந

| | | |
|---|---|---|
| 446 | 1032 | 2275 |
| 2379 | 2659 | 2824 |
| 3427 | 3830 | 5731 |
| 5765 | | |

(5 ஆம் பக்கம் பார்க்க)

## செச்சேனிய தலைநகர் ரஷ்யப் படைகள் வசம்!

செசசேனிய தலைநகர் குறொஸ்னி தமதுகட்டுப்பாட்டில வந்திருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருக்கிறார்

செச்சேனிய ஜனாதிபதியின் மாளிகையை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த ரஷ்ய படைகள், நகர மையத்தில் இருந்து செச்சேனிய வீரர்களை வெளியேற்றி விட்டதாக ரஷ்யபாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் ரஷ்ய படைகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டு விட்டதாக செச்சேனிய தரப்பினர் அறிவித்துள்ளனர்.

செச்சேனிய ஜனாதிபதி டுடோயேவ் எங்கு இருக்கிறார் என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீராமஜெயம்
பொன்னாலை
# ஸ்ரீவரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம்
# மார்கழி மாதத் திருவிழா
# விஞ்ஞாபனம்

**ஸ்ரீமந் நாராயணன் அடியார்களே!**

பொன்னாலை என்னும் திவ்ய ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு நிகழும் பவ வருடம் மார்கழி மாதம் 20ஆம் நாள் (**04 - 01 - 1995**) புதன்கிழமை காலை 9-30 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**கொடியேற்றம்:**
*மார்கழி மாதம் 20ஆம் நாள் (04-01-95) புதன்கிழமை காலை 9-30 மணி*

**சுவர்க்க வாயில் ஏகாதசி ஸ்னாபிஷேகம்**
*மார்கழி மாதம் 27ஆம் நாள் (புதன் பின்னிரவு) வியாழன் அதிகாலை 4மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் காலை 5 மணிக்கு*

**தேர்த் திருவிழா:**
*மார்கழி மாதம் 28ஆம் நாள் (12-01-95) வியாழக்கிழமை காலை 8-30மணிக்கு வசந்த மண்டபப் பூசை, தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருளும் காட்சி, இரவு ஏகாதசி புராண படனமும், கூட்டுப் பிரார்த்தனைகளும் இடம்பெறும்.*

**தீர்த்தத் திருவிழாவும், கொடியிறக்கமும்:**
*மார்கழி மாதம் 29ஆம் நாள் (13-01-95) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆலய தீர்த்தக் கிணற்றில் தீர்த்தம் நடைபெறும். மாலை 3மணிக்கு கொடியிறக்கும் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.*

மஹோற்சவ குரு:
**சிவஸ்ரீ சோமசுந்தர கௌரீஸ்வரக்குருக்கள்**
(மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் தேவஸ்தானம்)

குறிப்பு:
- **பகல் திருவிழா ஆரம்பம் காலை 7மணி**
- **மாலை திருவிழா ஆரம்பம் மாலை 3மணி**
- இத்திருவிழா காலங்களில் அடியார்கள் ஆசார சீலர்களாக வந்து ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்து பேரருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**— தேவஸ்தான பரிபாலன சபை.**
பொன்னாலை. [34488]

---

## யாழ்ப்பாணக் கல்லூரி
**பட்டதாரிப் பிரிவு**
*464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

**G. S. Q. / G. C. E. (A/L)**

வகுப்புகளுக்குப் பின்வரும் பாடங்களுக்கான விரிவுரையாளர்கள் / ஆசிரியர்கள் தேவை. கிழமை நாட்களில் கடமையாற்றக் கூடிய பட்டதாரிகள்/இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. விலங்கியல்
2. பௌதிகவியல்
3. தாவரவியல்

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **10-01-1995** க்கு முன்னர் அனுப்பவும்.

**- இயக்குநர்.**
[சி-253]

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
வடமராட்சிக் கோட்டம்
**பொதுச் சபைக் கூட்ட**
## அறிவித்தல்

எதிர்வரும் **04 — 01 — 1995** புதன்கிழமை மாலை 4 மணிக்கு ''சதா பொன்ஸ்'' கல்வி நிலையத்தில் நடைபெறும்.

சகல கல்வி நிலைய, பிரத்தியேக அங்கத்தவர்கள் தவறாது பங்கு கொள்ளவும்.

செயலாளர்
வடமராட்சிக் கோட்டம்
(சி-10148)

---

## இதய அஞ்சலி
பௌதிகவியல் ஆசிரியர்
**திரு. ரவீந்திரநாதனின்**
தந்தையார்
**திரு. சி. இரத்தினம்**
அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

**P' New Science Centre**
Jaffna.

**Science College**
Jaffna.
(சி/10149)

---

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன .3
யாழ். கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும். (க-17)

## வீட்டு கதிரைகள் இரவில் மாயம்

வீட்டு விறாந்தையில் இருந்த கதிரைகள் இரவு வேளை மாயமாய் மறைந்த சம்பவம் கொழும்புத்துறை மேற்கு பிரதான வீதியில் உள்ள உபதபால் கந்தோர் பணிமனை வீட்டில் நடைபெற்றுள்ளது. (ஒ-17)

## உலக வங்கி புதியஅரசுக்கு உதவி வழங்க பின்னடிப்பு

கொழும்பு, ஜன. 3
உலகவங்கியின் ஆலோசனைகளுக்கு புதிய அரசு செவிசாய்க்காததால், உலகவங்கி தமது நிதி உதவியை வழங்குவதில் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றை தனியார் மயமாக்குமாறு உலகவங்கி இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறியிருந்தது.

கடந்த அரசு 1993, 1994 ஆம் ஆண்டுகளில் 120 அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கியிருந்தது.

அதன் காரணமாக உலக வங்கி இலங்கைக்கு போதிய அளவு உதவி வழங்க முன்வந்திருந்தது.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எந்த நிறுவனமும் தனியார் மயப்படுத்தாததால் உலக வங்கி உதவி வழங்குவதற்கு பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

---

## NEW MASTER INSTITUTE
B. M. C. LANE
JAFFNA.

**95 A/L**
**DAY CLASSES**
பகல் நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.
(திங்., செவ்., வியா., வெள்ளி)

PHY. — 9-30 — 11-00
ZOO — 11-00 — 12-30
BOT. — 12-30 — 2-00
PURE / APPLIED — 11-00 — 1-00

---



## அமரர் வ. சின்னத்தம்பி
அவர்களின்
ஞாபகார்த்த பரிசுக்கான
# தாவரவியல்
# போட்டிப் பரீட்சை - 95 A/L

**இரண்டாவது சுற்றில் அதிவிசேட சித்தியடைந்து மாவட்ட மட்டத்தில் முன்னணியிலுள்ள மாணவர் விவரம்**

| | பெயர் | பெற்ற புள்ளிகள் NOV. | DEC. | சராசரி |
|---|---|---|---|---|
| 01. | A. டொமினிக் அரவிந்தன் (யாழ். இந்து) | 90 | 89 | 89.5 |
| 02. | T. வினோதன் (யாழ் இந்து) | 91 | 87 | 89.0 |
| 03. | R. ரமேஷ் சங்கர் (ஹாட்லிக் கல்லூரி) | 87 | 89 | 88.0 |
| 04. | S. செல்வதுஷ்யந் (யாழ். இந்து) | 86 | 88 | 87.0 |
| 05. | M. ரஜனி (யாழ்ப்பாணக் கல்லூரி) | 82 | 90 | 86.0 |
| 06. | K. யூட் ரிரோன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி) | 79 | 91 | 85.0 |
| 07. | B. சுதந்திரமதன் (யாழ். இந்து) | 92 | 72 | 82.0 |
| 08. | T. புளோரின் (சுண்டிக்குளி மகளிர்) | 83 | 81 | 82.0 |
| 09. | K. சசிலா (வேம்படி மகளிர்) | 86 | 77 | 81.5 |
| 10. | K. சுபாஜினி (யாழ்ப்பாணக் கல்லூரி) | 79 | 84 | 81.5 |
| | பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர் தொகை | | | 467 |

### பரீட்சை ஒழுங்கு முறைகள்

★ பின்வரும் தனியார் கல்வி நிலையங்களில் தாவரவியல் பாடத்தை கற்கும் மாணவர்களுக்கிடையிலேயே இப்போட்டி நடத்தப்படுகிறது.

1. புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம் – யாழ்ப்பாணம்
2. புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் – கன்னாதிட்டி
3. பளிங்கு – சாவகச்சேரி
4. மணியம் கல்வி நிலையம் – பருத்தித்துறை
5. பீக்கொன் கல்வி நிலையம் – உடுப்பிட்டி

★ பரீட்சைகள் பிரதிமாதமும் முதல் வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 4-00 – 6-00 வரை நடைபெறும்.

★ ஒவ்வொரு பரீட்சையிலும் 75 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் மாவட்ட ரீதியிலான தகுதி நிலை விவரப்பட்டியலை (Rank List) அந்தமாத இறுதியில் மேற்படி நிறுவனங்களின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

★ அடுத்து வரும் இரண்டு பரீட்சைப் புள்ளிகளின் சராசரி 80 இற்கும் அதிகமாகவுள்ள மாணவரின் பெயர்ப்பட்டியல் அவ்வப்போது பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும்.

★ எதிர்வரும் ஜூன் வரை நடைபெறுகின்ற 10 பரீட்சைகளை உள்ளடக்கிய இத்தொடரில் மாவட்ட மட்டத்தில் அதி சிறந்த துலங்கலைக் காட்டுகின்ற மாணவருக்கு பெறுமதியான பரிசுகள்.

**அமரரின் 18ஆவது சிரார்த்த தினமான 17 – 08 – 1995 அன்று வழங்கப்படும்.**

**திருமதி சிவகாமி சின்னத்தம்பி.**
(இளைப்பாறிய அதிபர்)

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி.
03 - 01 - 1995 [சி-10147]

---

சாவகச்சேரி பிரதேசசபை
**1995 ஆம் ஆண்டிற்கான குத்தகை**
# கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தைகளுக்கும் கடைகளுக்கும் திரும்ப கேள்விகள் **13—01—1995** முற்பகல் **10 00** மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். **24—12—1994** ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் எமது அறிவித்தலில் உள்ள நியதிகளும் நிபந்தனைகளும் இவற்றிற்கும் ஏற்புடையதாகும்.

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 500.00 | 50 00 | 50.00 |
| 2. மிருசுவில் வடக்குச்சந்தை | 500.00 | 50.00 | 50.00 |
| 3. கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 12000 00 | 200.00 | 200 00 |
| 4. கொடிகாமம் கருவாட்டுக்கடை இல. 1. | 2000 00 | 100.00 | 100.00 |
| 5. கொடிகாமம் கருவாட்டுக்கடை இல. 2. | 2000.00 | 100 00 | 100 00 |

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேசசபை,
கமநலசேவை நிலையக்கட்டடம்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
30—12—1994. [சி/103]

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்பு கோட்டம்
**மீள்பதிவு செய்வதற்கான**
## இறுதி அறிவித்தல்

இதுவரை காலமும் மீள்பதிவு செய்யத் தவறிய தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்பு நடத்துநர்கள், 9 பேருக்கு குறைந்த மாணவர்களைக் கொண்ட வகுப்புக்கள் அனைத்துக்கும் தங்கள் மீள்பதிவுகளை **04 - 01 - 1995** புதன்கிழமை காலை **9-00** மணிமுதல் **1-00** மணி வரை இல: 19 தனியார் கல்விப் பிரிவு, செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்ட இடத்தில் மீள் பதிவுகளை செய்து கொள்ளவும், இதுவே இறுதி அறிவித்தல் ஆகும்.

குறிப்பு:
இதுவரை சந்தா நிலுவைகள் செலுத்தாதவர்கள் அதனையும் செலுத்திக்கொள்ளவும்.

கு. நடேஸ்வரன்
செயலாளர்.
(சி-251)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**மாரிமுத்து செல்லப்பா**
(வேலணை)

பிறப்பு: **13—08—1908** இறப்பு: **04—12—1994**

அன்னையைப் போல் அன்புகாட்டி பரிந்து நீயும்
ஆதரித்த தன்மையினை மறக்கலாமோ
இன்றதனை எண்ணும் போது எங்கள் உள்ளம்
எரிகின்ற மெழுகாக உருகுதையா
அன்புடனே செல்லமுடன் வாழ்ந்த எங்கள்
இன்னுயிரே பிரிந்து விட்டாய் ஏன் அறியோம்
இன்றெமக்கு ஆறுதல் தான் கூற யாரும்
இல்லையய்யா துடிக்கின்றோம் உனை நினைந்து

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள், பிள்ளைகள்.
[34496]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 26 — 01 — 1929



ஐங்கரன் அடியில்: 26 — 12 — 1992

அமரர்
**Dr. கனகசபை பூரணலிங்கம்**
(வர்த்தலைவிளான், தெல்லிப்பழை)
**திதி: 03 . 01 . 1995**

உள்ளத்தாற் பொய்யாதொழுகி, எம் உள்ளம் நிறைந்த உத்தமனே. உள்ளும் புறமும் தூய்மையாய் வாழ்ந்த உங்கள் சுந்தரவதனம், பூரணசந்திரன் போல் எம் கண்களிலே பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மருதடி விநாயகரை இறைஞ்சுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (34494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணறு மூலம் வயல்களுக்கு நீர் இறைக்கும் விவசாயிகள்

## மழை வேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததை அடுத்து நெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிணறு வசதி உள்ள விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் அவசர அவசரமாக நீரை இறைத்து வருகின்றனர்.

மழை வேண்டி ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

சில இடங்களில் மக்கள் கொடும்பாவிகளையும் கட்டி எரித்து வருகின்றனர்.

கதிர் கக்கும் நிலையில் பயிர்கள் இருப்பதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

நீர் இறைப்பதினால் இம்முறை தமது உற்பத்திச் செலவு பன் மடங்காக அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தாழ்ந்த நிலங்களில் உள்ள வயல்களை விட மேட்டு நிலங்களில் உள்ள வயல்களே மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் —

தொடர்ந்து மழை பெய்யாவிடில் முழு வயல்களும் பெரும் அழிவை எதிர்நோக்குவதாகவும் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் தெரிவித்தார். (இ-17-28-135)

## வலயம் இரண்டுக்கு "ஓட்டோ"

யாழ். கல்வி வலயம் இரண்டின் அலுவலகத் தேவைகளுக்கென "ஓட்டோ" ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

தற்சமயம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'மாஹோ' கப்பலில் இந்த "ஓட்டோ" எடுத்து வரப்பட்டுள்ளதாகவும்—

ஓரிரு தினங்களில் அது இறக்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்து ஓட்டோ இறக்கப்பட்டதும், அது கல்வித் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டு கணக்காளரால் வலயம் 2க்கு கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் கல்வி வலயம் ஒன்றின் "ஓட்டோ"வையே வலயம் இரண்டு அலுவலகமும் பயன்படுத்தி வந்தது. (அ-3)

## பரீட்சை எடுக்காதவருக்கு பெறுபேறு கிடைத்தது!

கொழும்பு, ஜன 3

பரீட்சைக்கு தோற்றாத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை ஆணையாளர் பரீட்சைப் பெறுபேறுகளை அனுப்பி வைத்துள்ள சம்பவம் ஒன்று களுத்துறையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஒருவர் தனது தந்தையின் திடீர் மரணம் காரணமாக பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போய்விட்டது. எனினும் குறிப்பிட்ட பரீட்சையின் பெபேறு அந்த பரீட்சார்த்திக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

சென்ற வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதி களுத்துறை திஸ்ஸ மத்திய கல்லூரியில் 3ஆம் இலக்க பரீட்சை மண்டபத்தில் குறிப்பிட்ட சுட்டெண்ணைக் கொண்ட மேற்படி பரீட்சார்த்திக்கு 13புள்ளிகள் இடப்பட்டு பரீட்சை ஆணையாளர் பெறுபேறு அடங்கிய அட்டவணையை அனுப்பி வைத்துள்ளார். (க-17)

## மன்னாருக்கு பாடசாலை உபகரணங்கள்

மன்னார், ஜன. 3

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 9 பாடசாலைகளுக்கு யூ. என். எச். சி. ஆர். நிதியுதவி மூலம் பாடசாலை உபகரணங்களை மன்னார் மாவட்ட கல்வித் திணைக்களம் வழங்கவுள்ளது.

இந்த உபகரணங்களின் பெறுமதி 19 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க.17)

## துப்பாக்கி வெடித்து காயம்

காட்டுக்கு வேட்டைக்குச் சென்றவர்களில் ஒருவர் அங்கு ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி தடத்தில் சிக்கி அது வெடித்ததில் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி புதூர் காட்டுப்பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், முருகண்டியைச் சேர்ந்த நாகராசா சிவகுமார் (வயது 14) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க.15)

## பட்டம் விடும் போட்டி

வல்வை சனசமூக சேவா நிலையத்தினர் 15 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று 'பட்டம்' ஏற்றும் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர். (க-155)

## கைதானதை ஆட்சேபித்து எதிரணி எம். பி. வழக்கு

கொழும்பு, ஜன. 3

இரகசியப் பொலீஸாரால் தாம் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஐ. தே. கட்சி எம். பியான டாக்டர் ராஜித சேனரத்ன மனித உரிமை மீறல் மனு ஒன்றை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறார்.

பிரிமா பேக்கறியில் நடக்கும் வேலை நிறுத்தம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் விடுதலையானது தெரிந்ததே. (ஓ-3)

## மாவட்ட நிர்வாகம் மீண்டும் அரசாங்க அதிபர்களிடம்!

கொழும்பு, ஜன. 3

மாவட்ட நிர்வாகத்தை மீண்டும் அரச அதிபர்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரச அதிபர்களிடம் இருந்த மாவட்ட நிர்வாகம் கடந்த வருடம் பிரதேச செயலாளர்களிடம் பகிர்ந்து வழங்கப்பட்டிருந்தது.

மாவட்ட அரச அதிபர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அவர் பிரதேச செயலகங்களையும், அரச திணைக்களங்களையும் மேற்பார்வை செய்வார்.

## சமாதான நீதிவான் இன்றி அவதி

சுழிபுரம், ஜன. 3

சுழிபுரம் பகுதியில் சமாதான நீதிவான் பதவியுள்ளவர்கள் எவரும் இல்லாததால் பொது மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய முடியாது பெரும் கஷ்டப்படுகின்றனர்.

இக்குறையை நீக்குமாறு பல பொது நிறுவனங்கள் மற்றும் பிரமுகர்கள் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கா. சந்திரராசாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-28)

## அமெரிக்க நாட்டுக்கான அதிர்ஷ்ட வீசா

கொழும்பு, ஜன. 3

அமெரிக்காவுக்கான அதிர்ஷ்ட குடிவரவு வீசா சீட்டிழுப்பில் இடம்பெற விரும்பும் இலங்கையர்கள் தமது விண்ணப்பங்களை ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கும் இடையில் அமெரிக்காவிலுள்ள தேசிய வீசா நிலையத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இலங்கையரோ அல்லது வேறு நாட்டவரோ இந்த அதிர்ஷ்ட வீசாவைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் ஜி. சி. ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் குறைந்தது சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது இரு வருடக் தொழில் அனுபவமும் குறைந்தது இரு ஆண்டுகள் தொழிற் பயிற்சி அனுபவம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் பதிவின் போது தொழில், கல்வித்தகைமை சான்றிதழ்கள் என்பனவற்றைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை. இவ்வீசாவைப் பெறுவதற்காக இதற்கு முந்திய வருடங்களில் விண்ணப்பித்தவர்கள் இம்முறையும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை 15 X 25 சென்றிமீற்றர் நீளமும் 9 X 11 சென்றிமீற்றர் அகலமும் உடைய கடித உறையில் அமெரிக்க அதிர்ஷ்ட குடிவரவு விசாத் திட்டம், தேசிய வீசா நிலையம், போர்ட் மௌத், ஏ. எச். 00210, ஐக்கிய அமெரிக்கா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களைத் தயாரித்து விமானத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கோ அல்லது மற்றைய அமெரிக்க விலாசங்களுக்கோ அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆறு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு கம்பியூட்டர் மூலம் இவ் அதிர்ஷ்டத் தெரிவு இடம் பெறும். இலங்கை ஆசிய வலயத்தினுள் அடங்கும் வெற்றி பெற்றவர்களுக்குத் தபால் மூலம் அறிவிக்கப்படும். (ஒ-4)

## கப்பல் சேவை தடை நோயாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3

நோயாளர் கப்பல் சேவை தடைப்பட்டிருப்பதால் அவசர சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், நோயாளர்களை கிளாலியூடாக கொழும்புக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கும் நோக்கம் எவற்றையும் வைத்தியசாலை மேற்கொள்ளவில்லை என்று யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் செல்வி க. நவமலர் தெரிவித்தார்.

கிளாலி கடற்பகுதி பாதுகாப்பான பிரதேசம் இல்லாதபடியால் நோயாளர்களை அந்த பாதையூடாக அனுப்ப முடியாது என்றும்—

நோயாளர் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி தாம் சர்வதேச செஞ்சிலுவை குழுவினருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் பணிப்பாளர் செல்வி க. நவமலர் மேலும் தெரிவித்தார். (இ-17)

## வெளிநாட்டு முகவர் தப்பி ஓட்டம்: 4 ஆயிரம் கடவுச்சீட்டுகள் கொள்ளுப்பிட்டியில் சிக்கின

கொழும்பு, ஜன. 3

வெளிநாட்டில வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர்களையும் யுவதிகளையும் ஏமாற்றி அவர்களிடம் இருந்து பல கோடி ரூபா பணத்தை சுருட்டிக் கொண்டு வெளிநாட்டு முகவர் ஒருவர் நாட்டை விட்டுத் தப்பிஓடி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அவர் தங்கியிருந்த வீடு ஒன்றில் இருந்து நாலாயிரம் கடவுச் சீட்டுக்களை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஏமாற்று பேர்வழி தொடர்பான விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடவுச் சீட்டுக்களைக் கொடுத்து ஏமாறியோர் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-17)

## மிக மோசமான நிலையில் நவக்கிரி-எல்லாளன் வீதி

யாழ்ப்பாணம், ஜன. 3

வீதி அமைக்கப் பட்ட காலத்தில் இருந்து, பல ஆண்டுகளுக்கு மேலாக, திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படாத நிலையில் நவக்கிரிப் பகுதி எல்லாளன் வடக்கு வீதி உள்ளது.

புத்தூர் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான இந்த வீதியைத் திருத்தும் படி மக்கள் வேண்டுகோள் விடுத்து வந்துள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிய வருகின்றது. (க-15)

## தெற்கில் உருவாகியுள்ள எதிர்ப்பு அலையால் அரசுக்கு நெருக்கடி

தெற்கில் உருவாகியுள்ள எதிர்ப்பு அலையால் அரசு பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி உள்ளதாக அரசியல், பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னைய அரசு மேற்கொண்டு வந்த பல திட்டங்களை புதிய அரசு கைவிட்டதால் நெருக்கடி நிலை உருவாகக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பள உயர்வு, வதிவிடம், சீருடை போன்று பல கோரிக்கைகளை முன் வைத்து தெற்கில் தொடரும் வேலை நிறுத்தங்கள்—

அரச கூட்டுத்தாபனம், அரச திணைக்களங்கள் ஆகியவற்றை தனியார் கம்பனிகளாக்கும் திட்டத்தை கைவிட்டமை —

பங்கீட்டு சந்தையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி—

வெளிநாடுகளுக்கு போதியளவு பொருள்கள் ஏற்றுமதி செய்யாமை —

வெளிநாட்டு மூலதனம் இலங்கையில் நிறுத்தப்பட்டமை—

பொருளாதாரக் கொள்கையை அரசு அறிவிக்காததால் பொருள் இறக்குமதி செய்வதை தனியார் தற்காலிகமாக நிறுத்தியுள்ளமை —

இவை போன்ற காரணங்களால் அரசுக்கு நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையால் கொழும்பில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் —

திறைசேரியில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# பிரபாகரன் ஓர் அபூர்வ மனிதர்; போராட்டத்தின் உந்து சக்தி அவரே

## சிங்களப் பத்திரிகை "லக்பிம" கருத்து

[முதலாம் கட்ட சமாதானப் பேச்சு இடம்பெற்ற வேளை யாழ்ப்பாணம் வந்திருந்த "லக்பிம" என்னும் சிங்களப் பத்திரிகையின் செய்தியாளர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது]

தென்பகுதியில் வாழும் எங்களுக்கு வடபகுதியிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத இயக்கமாகத் தோன்றுகிறது. அதன் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனை முதல் தரப் பயங்கரவாதி, துரோகி என நினைக்கிறோம்; அவ்வாறு காட்டப்படுகிறது. ஆனால் வடபகுதி வாழ் மக்களின் சிந்தனையில் விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் தாயகத்திற்காகப் போராடுகிறது. அதன் தலைவர் இனத்தை நேசிப்பதில் முதற்தரமானவர்; சிறந்த வீரன்

எது எவ்வாறாயினும் இன்று விடுதலைப் புலிகள் அமைப்பு உலகில் மிகச் சிறந்த கெரில்லா அமைப்பாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஒரேயொரு ஆனால் மிக ஆற்றல் வாய்ந்த உந்துசக்தியாய் விளங்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனேயாவார்.

அண்மையில் எமக்கு யாழ்ப்பாணம் செல்ல இரண்டு, மூன்று சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அப்போது விடுதலைப் புலிகளின் தலைவரின் குண இயல்புகள் பற்றிய தகவல்களை எம்மால் சேகரிக்க முடிந்தது.

### அபூர்வ மனிதர்

வரண்ட, சுண்ணாம்புக் கற்பிரதேசத்தை வளம் பொருந்திய விளைநிலமாக மாற்றிய யாழ்ப்பாண மக்களுக்கு, தன் உயிரை அழித்து அர்ப்பணிக்கும் கலையை கற்பித்தவர் பிரபாகரன் என்னும் அபூர்வ மனிதராவார். அவ்வளவுக்கு அவர் வடபகுதி மக்களிடையே பிரபலம் பெற்றுள்ளார்.

இருப்பினும் விடுதலைப் புலிப் போராளிகளில் அனேகர் அவரை இதுவரை நேரில் காணவில்லை. விடுதலைப் புலிப் போராளிகள் "தமிழீழம்" என்னும் தாயகத்தை மீட்பதற்காகப் போராடுகிறார்கள். அவர்கள் விடுதலைப் போராட்டத்தை நடாத்துவதால் புலிகளின் இராணுவத்தைச் சேர்ந்த எவருக்கும் சம்பளம் வழங்கப்படுவதில்லை. மண்ணிற்காக வாழ்வை அர்ப்பணிப்பது என்னும் பிரபாகரனின் கோட்பாடு இளம் போராளிகளை மிகவும் கவர்ந்துள்ளது.

'தென்பகுதியில் வாழும் எங்களுக்கு பிரபாகரன் ஒரு பயங்கரவாதி. ஒரு கொலைகாரன் எனக்காட்டப்படுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் எங்களைப் போல சிந்திக்கவில்லை. இனத்திற்காகப் போராடுபவர், சிறந்த வீரன் என நினைக்கிறார்கள் பிரபாகரன் பற்றிய வட பகுதி தென்பகுதி மக்களின் எண்ணங்களின் வேறுபாடுகள். உணர்வுகளின் வேறுபாடுகள் ஆகியவற்றை எடுத்துக் காட்டக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகும் இது'

தலைவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பது, தலைவனின் கட்டளையை சிறு பிசகின்றி அனுசரிப்பது, அர்ப்பணிப்பு, இரகசியங்களைக் காப்பாற்றுவது போன்ற கெரில்லாப்படைக்கு இருக்க வேண்டிய பல குண இயல்புகளை விடுதலைப் புலிகள் அமைப்பு நிறைவாகக் கொண்டுள்ளது.

அரச இராணுவத்துடன் வீரமுடன் போராடி வீரமரணமடைந்த மாவீரர்களைக் கௌரவிப்பது யாழ்ப்பாண மக்களின் வாழ்வோடு ஒன்றிவிட்ட வழக்கமாகிவிட்டது.

விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்படும் இவ்வாறான விசேட வைபவங்களில் பிரபாகரன் முக்கிய அதிதியாகப் பங்குபற்றுவார். யாழ். நகரிலிருந்து [illegible] தூரத்தில் மாவீரர் துயிலும் இல்லம் [illegible]துள்ளது. போரில் வீரமரணமடைந்த ஒவ்வொரு போராளியினது வித்துடல் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறது

யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான விடுதலைப் புலிப் போராளிகள் பிரபாகரனை "தலைவர்", "பிரபா" என அழைக்கின்றனர். விடுதலைப் புலிப் போராளிகள் தமது தலைவர் மீது அளப்பரிய மதிப்பையும் கௌரவத்தையும் கொண்டுள்ளனர் "கரும்புலிகள்" படைப்பிரிவில் சேரும் போராளிகள் தமது தலைவனை "பிரபா அண்ணை" என அழைக்கின்றனர்.

### விசேட திறமை

தனது விடுதலை இராணுவத்தில் "கரும்புலிகளையும்", கடற் கரும்புலிகளையும் உருவாக்கியுள்ளது பிரபாகரனின் விஷேடத் திறமைக்கு எடுத்துக் காட்டு எனக் கருதப்படுகிறது. தனது போராட்ட வாழ்க்கையில் கிடைத்த அனுபவங்களே இவ்வாறான படைப்பிரிவுகளை உருவாக்க உதவியதாக பிரபாகரனே பலமுறைகூறியதாகச் சொல்லப்படுகிறது.

தமது உயிர்களை விடவும் போராட்டமே உத்தமமானது [illegible] போராளிகள் கருதுகின்றனர். அவர் [illegible]கும் கொடிய விஷமான "சயனைட்" குப்பிகள் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். போர்ப் பயிற்சிகளை முடித்து வெளியேறும் போது போராளிகளுக்கு 'சயனைட்' குப்பிகள் வழங்கப்படுகின்றன. போராளிகளுக்குப் பயிற்சி அளித்த தளபதியால் பயிற்சி முடித்து வெளியேறும் போராளிகளின்கழுத்தில் இச் "சயனைட்" குப்பிகள் அணிவிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகள் உருவாகிய



ஆரம்ப காலத்தில் தலைவர் பிரபாகரனே இக் குப்பிகளைப் போராளிகளுக்கு அணிவித்தாராம் விடுதலைப் புலிகள் அமைப்பின் இரகசியங்கள் எதிரியின் கைகளுக்கு சென்றடையாமல் இருப்பதற்கான முக்கியத்துவமும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்[illegible]திரியிடம் அகப்பட்டால் எதிரிக்கு தகவல்களை அறிய வாய்ப்பளிக்காமல் தன் உயிரை அர்ப்பணிப்பதால் ஏற்படும் கௌரவம் பற்றியும் போராளிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது

### அதிர்ஷ்டமாக கருதுகிறார்கள்

தற்போதும் கரும்புலிப் போராளிகளுக்கு தலைவரே "சயனைட்" குப்பிகளை அணிவிப்பாராம். தலைவர் பிரபாகரனின் கைகளால் 'சயனைட்' குப்பியை அணியப் பெறும் வாய்ப்புக்கிடைப்பின் அது தங்களுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய அதிஷ்டமென வடபகுதிப் போராளிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான அதிர்ஷ்டம் ஒரு சிலருக்கே கிடைக்கிறது.

அதுமாத்திரமல்ல, கரும்புலிகளுக்கான பயிற்சிகள் தலைவர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பிலேயே நடத்தப்படுகின்றன.

பயிற்சிகள் பற்றியே தலைவர் எப்போதும் சிந்திப்பார். சிலசமயம் பயிற்சிபெறும் போராளிகளை வந்தும் சந்திப்பார். கரும்புலிகளுக்கு தலைவருடன் புகைப்படம் எடுக்க வாய்ப்புண்டு இந்நிகழ்வைக் கரும்புலிகள் தங்கள் வாழ்வில் என்றும் மறக்க முடியாத சம்பவம் எனக் கூறுகின்றனர்.

விஷேட போர் நடவடிக்கைகளுக்கே கரும்புலிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு தாக்குதலும் ஆரம்பிக்கப்படு முன்னர், கரும்புலிகளைச் சந்திப்பது தலைவரின் வழக்கமாகும். கரும்புலிகளைத் தலைவர் தன்னுடன் உணவருந்தவும் அழைப்பது வழக்கம். இவ்வேளையில்தாய் நாட்டிற்காக வீரத்துடன் வாழ்க்கையை அர்ப்பணிக்ககிடைத்த நல்லதோர்சந்தர்ப்பம் எனத் தலைவர் கூறுவாராம். விஷேட தாக்குதலை மேற்கொள்ளப் புறப்படும் கரும்புலிகளுக்கு உச்சிமோந்து விடத் தலைவர் மறுப்பதில்லையாம்!

1993 ஒகஸ்ட் மாதத்தில் கடற்படைக்குச் சொந்தமான "சுப்பர்டோறா" படகுத் தகர்ப்பும் இவ்வாறான ஒரு விசேட நடவடிக்கையாகும். கடற்புலிக் கப்டன்களான மதன், வரதன் ஆகியோரால் இப்படகு தகர்க்கப்பட்டது. அவர்கள் இருவரும் இதில் வீரமரணமடைந்தனர். இருப்பினும் இவர்களது மரணம் இத்தாக்குதல் உரிய முறையில் நிறைவேற காரணமாய் அமைந்தது. இச்சம்பவம் நிகழ்வதற்கு முதல் நாள் இருவரும் தலைவருடன் களித்த பொழுதை விவரிக்கும் புகைப்படங்களும் அவ்வீரர்கள் பற்றிய குறிப்புகளும் ஒரு பத்திரிகையில் ஒரு பக்கம் முழுவதும் பிரசுரமாகியிருந்தது.

ஒரு முறை யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. துரைராஜாவைப் புலிகள் கடத்திச் சென்றதாக யாழ்ப்பாணத்தில் வதந்தி பரவியது. இந்த வதந்தி பரவிய காலத்தில் திரு. துரைராஜா கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் செல்லவிருந்தார். உண்மையில் அந்த வதந்தியில் உண்மை இல்லை. தலைவர் பிரபாகரனிடம் துணைவேந்தர் அழைத்துச் செல்லப்பட்டதையே கடத்திச் செல்லப்பட்டார் என மக்கள் நினைத்தனர். தலைவர் பிரபாகரன் துணைவேந்தரின் இரு கைகளையும் பற்றியவாறு "ஐயா, உங்கள் நோயை சுகப்படுத்தி விட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வாருங்கள்" எனக் கூறினார். அத்துடன் விஷேட பதக்கமும் அளித்துக் கௌரவித்தார்.

துணைவேந்தர் கடத்தப்பட்டதான வதந்தியை அடுத்து துயரடைந்த மக்கள், துணைவேந்தரை தலைவர் கௌரவித்த செய்தியை அறிந்ததும் மகிழ்வுற்றனர். (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனையாகிறது**

புதிய விஞ்ஞானம் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி ஆண்டு 6, 7, 8, 9, 10, 11, 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான தமிழ் மொழி, கணிதம், இன்பத்தமிழ்க் கட்டுரை வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8169)

**கலண்டர்கள்**

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் இலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம். பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (34367)

**சிவம்ஸ் கலண்டர்**

இரகுநாதையர் பஞ்சாங்கப்படி கணித்து வெளிவந்துள்ளது சிவம் கலண்டர். விலை குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றது. அப்பியாசக் கொப்பிகள் தாராளமாகக் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீ காந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி 47)

**G. A. Q. — B. A.**

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்- அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை. பாடலும் விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு. கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு: உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-87]

**வீடு விற்பனைக்கு**

நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி சு. அன்னலட்சுமி, இல. 83, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். [34483]

**கண்டெடுக்கப்பட்டது**

1-1-95 காலை நவாலி வீதியில் விலை உயர்ந்த பொருள் ஒன்று லிங் பார்மஸி உரிமையாளரால் கண்டெடுக்கப்பட்டது. தவறவிட்டவர் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும். லிங் பார்மஸி, காங்கேசன்துறை வீதி, தட்டா தெரு, யாழ்ப்பாணம். [34477]

**வெளிவந்துவிட்டது!**

## அறிவுக் களஞ்சியம்

28

(சி-89)

**O/L DAY CLASS**

நெல்லியடியில் சயன்ஸ் அக்கடமி

பருத்தித்துறையில் தம். சிட்டி வீதியில்

**N. C. A.** கல்வி நிறுவனம்

| | |
|---|---|
| தமிழ் | 8 — 9 |
| கணிதம் | 9 — 10 |
| விஞ்ஞானம் | 10 — 11 |
| சமூகம் | 11 — 12 |
| ஆங்கிலம் | 12 — 1 |

கிழமையில் நான்கு நாட்கள்


ஆரம்பம்: **06-01-1995** காலை 8 மணி

[34464]

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

## ஓராண்டு நினைவலைகள்



**அமரர் சுந்தரம் சின்னத்துரை**
(பத்தர்)

ஆனந்த உதிப்பு: 1913-10-27 | ஆறாத்துயரம்: 1994-01-13

திதி: 1 95 01-03

பெற்றெடுத்துப் பெயரிட்டுப் பேணிக் காத்துப்
பிரியமுடன் வளர்த்த எம் அன்புத் தந்தையே!..
உங்கள் அன்பும், கண்டிப்பும்
எப்போதும் எங்களை வழிநடத்தும்
இன்பத்தில் புன்னகை பூத்தும்
துன்பத்தில் ஆறுதல் தந்தும்
எம்முடன் இணைந்து வாழ்ந்தீர்கள்!
என்றும் எங்கள் இதய நினைவுகள்
உங்கள் ஆத்மாவுக்கு சமர்ப்பணம்...


உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்;

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

S. யோகராஜா,
(கொழும்பு)
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (34468)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் நல்லதம்பி சிவலிங்கம்**
(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)

தோற்றம்: 15 — 02 — 1935 | மறைவு: 05 — 12 — 1994

திதி: 04 — 0 — 1995

எம் உயிர்போல் உடனிருந்து எம்மை நல்வழியில் வழி நடத்திய, எங்கள் அன்பு அப்பா!

தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தினாலும், தாங்கள் எமக்குக் காட்டிய பரிவும் பாசமும், நல்லறிவும் — என்றும் எங்களை உடனிருந்து வழி நடத்தும்.

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04-01-95) புதன்கிழமை அதிகாலை நடைபெறும். அன்றையதினம் அனைவரையும் கலந்து, மதிய போசனத்தில் பங்குபற்றி ஏகுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற நாளன்று, கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், உடனிருந்து சகல உதவிகளும் புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (34478)

---

ஓம்
அராலி வடக்கு
மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில்

## சூரன் விற்பனைக்கு

எமது ஆலயத்தில் இருக்கும் சூரன் விற்பனைக்கு உண்டு. இதனை நேரில் பார்வையிட்டு இதற்கான விலைக் கூறுகள் அடங்கிய கேள்விப் பத்திரத்தை தலைவரிடம் சமர்ப்பிக்கவும்.

ஆ. சுப்பிரமணியம், தலைவர். | ப. கருணாநிதி, செயலாளர்.

[34481]

---

## பைண்டர்கள் தேவை

அனுபவமும், தேர்ச்சியும் மிக்க பைண்டர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

உடன் நேரில் தொடர்பு கொள்க:

முகாமையாளர் (ஆளணி, நிர்வாகம்),
உதயன்,
யாழ்ப்பாணம்.

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

**மீள்பதிவு தொடர்பான அறிவித்தல்**

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய நிறுவனங்களுக்கு மீள்பதிவு செய்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

காலம்: 04 — 01 — 1995 புதன்
9-00 — பிற்பகல் 1-00 மணி வரை

யாழ்., பண்டத்தரிப்பு, மருதனார்மடம் கோட்டங்கள்
19, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்
என்ற அலுவலகத்திலும்

வடமராட்சி: சதா பொன்ஸ், மாலுசந்தி.
தென்மராட்சி: சுஷாந்தீஸ், டச்சு வீதி, சாவகச்சேரி.
என்பவற்றிலும் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

* மீள்பதிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[சி-10141]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
**இலச்சுமிப்பிள்ளை ஆறுமுகம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மலர்வு: 15 — 05 — 1922
உதிர்வு: 13 — 01 — 1994

ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும். அருவமாய் இருந்தும் எம்மை வழி நடத்திச் செல்லும் எங்கள் அன்புத் தாயே! உங்கள் ஆத்ம சாந்திக்காக அரியாலையூர் விநாயகர், அம்மன், முருகப்பெருமான் அனைவரையும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

634, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். [34482]

---

## தட்டெழுத்தாளர்கள் தேவை

தமிழ்-ஆங்கில தட்டெழுத்தாளர்கள் தேவை. கடிதங்களைத் தாமாகத் தயாரிப்பதிலும் வேகமாகத் தட்டச்சு செய்வதிலும் அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சேவையிலிருந்து ஒய்வு பெற்றோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு கொள்க:

முகாமையாளர் [ஆளணி, நிர்வாகம்],
உதயன்
யாழ்ப்பாணம்.

---

விசேட ஆங்கில மொழி

## கற்கை நெறி

## SPECIAL ENGLISH

- For School-Leavers; University & Technical Students & Officers
- A Comprehensive Course
- Course Covers requirements of N. C. E., TOEFL., E. L. T, & English Teachers Selection Examinations.
- Commences on **07-01-1995** SAT. பி. ப. 2 மணி

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம் [SAT. SUN. - 2-30]

For details, Contact:
Director,
**NEW SCIENCE HALL**
Kannathiddi, Jaffna.
(சி/10138)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பிரிவு: III

ஆண்டு 9, 10, 11
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 03 - 01 - 1995 (இன்று)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — இந்திரன் |
| தமிழ் | — பண்டிதர் N. S. மணியம் |
| ஆங்கிலம் | — மகாலிங்கம் |
| சமூகக்கல்வி | — வேலா |
| வர்த்தகம் | — நாதன் |

- அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.
- அலகு ரீதியான பரீட்சைகள் நடைபெறும்.

(சி-59)

---

## வின்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு I

O/L **DAY CLASS** (8மணி — 2மணி)

ஆரம்பம்: 05 - 01 - 1995 8 மணி

- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
- பாடசாலை செல்லாத மாணவர்களுக்கே அனுமதி
- அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-99)

---

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: **08 - 01 - 1995** மணி 10-30

Lectures by:
S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (London)

- கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400/மட்டுமே.
- BASICகற்கும் மாணவர்களுக்கு Lotus, Word Star பாட நெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை
- அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்
- கூடிய செய்முறைப் பயிற்சி
- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
- Short-Hand & Typing LOTUS 1-2-3 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.
(சி/10146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## ஆதிக்கத்தனமா?

கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் திருத்தந்தை, பரிசுத்த பாப்பரசர் இம்மாதம் இருபதாம் திகதி ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்கிறார். அவருக்கு அரச வரவேற்பு, மரியாதை அளிப்பதற்காக அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபா செலவில் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

பரிசுத்த பாப்பரசர் எழுதிய ''நம்பிக்கையின் வாசலைத் தாண்டுதல்'' என்ற நூலில், பௌத்த சமயத்துக்கு அபகீர்த்தி உண்டு பண்ணும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார் என்று பெரிதுபடுத்தி, அவரது விஜயத்தைப் பகிஷ்கரிக்கப்போவதாக ஸ்ரீலங்காவின் பௌத்த பீடங்கள் போர்க்கொடி பிடித்தன.

பௌத்த மதத்தை நிந்தித்தவருக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் அரச வரவேற்பு அளிக்கக்கூடாது என்ற அழுத்தமும் பௌத்தர்களினால் போடப்பட்டது. ஆனால் வத்திக்கான் தலைவர் என்ற வகையில் தாம் வரவேற்பும் மரியாதையும் அளிப்பதாகக் கூறி அந்த அழுத்தத்தை சந்திரிகா உடைத்து எறிந்துவிட்டார்.

பாப்பரசர் எழுதிய நூலின் வாசகத்தில் உண்டான மொழி பெயர்ப்புத் தப்புக் காரணமாகவே, தவறான கருத்து தோற்றுவிக்கப்பட்டது; பாப்பரசர் சார்பில் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை இது குறித்து வருத்தம் அடைகின்றது; என்ற ''சமாளிப்புகள்'' மூலம் பௌத்தர்களின் எதிர்ப்பு ஒருவாறு தணிக்கப்பட்டிருக்கிறது.

இவை ஒருபுறமிருக்க, பாப்பரசரின் கொழும்பு வருகையை முன்னிட்டு வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்கள் கொழும்பு செல்வதற்கு தடை விதிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அதாவது பாப்பரசரின் விஜயத்துக்கு முன்பிருந்தே—பரிசுத்த தந்தையை தரிசிக்கச் செல்பவர்களைத் தவிர—வடக்கு-கிழக்கிலிருந்து ஏனையோர் கொழும்புக்குப் போக முடியாது. பாதுகாப்புக் காரணங்களை முன் வைத்து பாதுகாப்பு அமைச்சுச் செய்த சிபார்சுகளை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது!

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக லட்சக் கணக்கான கத்தோலிக்க மக்கள் கொழும்பில் கூடுவார்கள். அவருக்கு வரவேற்பளிக்கப்படும் காலிமுகத்திடலில் பாதுகாப்பை பலப்படுத்துவது, உறுதி செய்வது என்பது ஸ்ரீலங்கா பொலீஸாருக்கும், படையினருக்கும் இமாலயச் சாதனைக்கான ஆயத்தமாகத் தான் இருக்கப் போகிறது.

அதற்காக, வடக்கு-கிழக்குத் தமிழர்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காகக் கொழும்பு செல்வதற்குத் தடை விதிப்பது என்பது ஆதிக்கத்தனமும், பிரசைகள் என்ற வகையில் தமிழர்களின் சுதந்திர நடமாட்டத்துக்கான உரிமையைப் பறிக்கும் அதிகாரத் தன்மையுமாகும்.

தமிழர்கள் என்றால் அவர்களை என்னவும் செய்யலாம்; அவர்கள் மீது எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கலாம்; ''நாயா''கவும் நடத்தலாம் என்ற சிங்களத் திமிர்த்தனத்தின் வெளிப்பாடு இது; செயற்பாடு இது! இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழர்களை இந்தளவு கீழ்மட்டத்திற்குத் தள்ளி விடும் அரசு தானா அவர்களின் உரிமைகளை வழங்கப் போகிறது?

வெளிநாடுகளில் உள்ள தங்கள் உறவினர்களோடு தொடர்பு கொள்வதற்கும், வெளிநாட்டு வங்கிக் காசோலைகளை மாற்றுவதற்கும் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் மாற்று ஒழுங்கு செய்யப்படுகிறதே என்று அரசு கூறலாம். வடக்கில் உள்ள எல்லா மக்களுக்கும் வவுனியாவில் தங்குவதற்கும், கிழக்கில் உள்ள எல்லா மக்களுக்கும் மட்டக்களப்பில் தங்குவதற்கும் வசதிகள் வாய்ப்புகள் உண்டா? அது குறித்து அரசு சிந்தித்தது உண்டோ? அரசு தனது வசதியைப் பார்த்தால் மக்கள் வசதியைக் கவனிப்பது யார்?

# சமாதானப் பேச்சை தொடருவதற்காக ராணுவ தாக்குதல்களை தடுத்தேன்!

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 3

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடர வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இராணுவத்தினரால் திட்டமிடப்பட்டிருந்த பல பாரிய தாக்குதல்களை நான் தடுத்திருக்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் பிரபல பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணா நாயக்கவுக்கு அளித்திருந்த பேட்டி ஒன்றின் போது குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி தனது பேட்டியில் தொடர்ந்து கூறியதாவது:

இந்த இராணுவத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் பொதுமக்களுக்கு பெரும் இழப்புக்களும், சேதங்களும் ஏற்பட்டிருக்கும். அத்தகைய நிலைவரம் சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததல்ல

மோதல்கள் நிறுத்தம் ஒன்று பிரகடனப்படுத்தப்படாத ஒரு நிலையில் சுயமரியாதை கொண்ட எந்தவொரு அரசாங்கமுமே, நாட்டின் சுயாதிபத்தியத்தைக் காப்பாற்றும் கடப்பாடு கொண்ட எந்தவொரு அரசுமே எந்த விளைவுக்கும் முகம் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும் என்ற போதிலும் சமாதானப் பேச்சில் கொண்டிருக்கும் அக்கறை காரணமாக அரசாங்கம் மோதலில் கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை.

அரசுக்கு பேச்சு வார்த்தையில் இருக்கும் கடப்பாடு புலிகளுக்கும் இருக்க வேண்டும். புலிகள் இயக்கத் தலைவர்கள் விவேகமிக்கவர்கள். தவறான பிரசாரங்களை அவர்கள் நம்பக்கூடாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த நாள் தொட்டு ஒரு போதுமே நாம் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் முனைப்பில் தயக்கம் காட்டவேயில்லை. சமாதான முயற்சியின் சில அம்சங்களையே நாம் ஒத்திவைத்தோம்.

இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சு வார்த்தை மூலமாக தீரவு காண்பது என்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. இது விடயத்தில் முன்னர் கொண்டிருந்த அதே உறுதிப்பாட்டையே அரசு இப்போதும் கொண்டிருக்கிறது—என்றார்;

(ஒ-3)

# இந்திய அரசாங்க புலமைப் பரிசில்கள்

கொழும்பு, ஜன. 3

1995 ஆம் ஆண்டுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் பட்ட படிப்பு, பட்டப்பின் படிப்பு புலமைப் பரிசில்களுக்கு தகுதி பெற்ற இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கல்வி உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

மருத்துவம் தவிர்ந்த சகல கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழியில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி மாலை 4 மணி வரை இதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-ஜ)

கொழும்பில்

## சோதனை என்று கூறி பெண்ணிடம் பணம் திருட்டு

கொழும்பு, ஜன

சோதனை செய்வதாகப் பாவனை செய்து பணம் அபகரிக்கும் திருட்டுச் செயல் கொழும்பில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

அண்மையில் இதேபோன்ற ஒரு சம்பவத்தில் வயோதிபப் பெண் ஒருவர் 8 ஆயிரத்து 500 ரூபா பணத்தை இழந்துள்ளார்.

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியையான அருட்பிரகாசம் யோசப்பின் மேரிதிரேசா என்ற வயோதிபப் பெண்ணே வெள்ளவத்தையில் இம்மோசடிக்குள்ளானார். இச்சம்பவம் பற்றி அறிய வருவதாவது;

வெள்ளவத்தை வீதியால் அவர் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது கடை ஒன்றிலிருந்து வந்த வெள்ளை உடைதரித்த இளைஞர் சிலர் ''செக்கிங்'' எனக்கூறியவாறு அடையாள அட்டை பணப்பை முதலியவற்றை வாங்கி பார்த்து விட்டுப் பின் அவற்றைத் திருப்பி கொடுத்தனர். அப்பொழுது பணப்பையில் இருந்த பணம் 8,500 ரூபாவும் காணாமல் போயிருந்தது. இளைஞர்களும் தலைமறைவாகி விட்டனர். (க-15)

## ஆசிரியரின் புதிய சம்பளம் மார்ச்சில் நிலுவையுடன்!

யாழ்ப்பாணம், ஜன. 3

புதிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் சகல ஆசிரியர்களுக்கும் ஜனவரி பெப்ரவரி மாத நிலுவையுடன் புதிய சம்பளம் மார்ச் மாதத்தில் கிடைக்கும்.

இலங்கை ஆசிரியர் சேவை அதற்குரிய புதிய சம்பளத் திட்டம் தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களை உள்வாங்கும் முறைபோன்ற சகல விவரங்களையும்உள்ளடக்கிய வர்த்தமானிப் பிரசுரம் 31-12-1994 இற்கிடையில் வெளியிடப்படும் என்றும் ஏற்கனவே ஆசிரியர் சங்கங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்திட்டத்திற்கும், ஆசிரிய வகைகளிற்கும், ஆசிரியர்களை உள்வாங்கும் முறையிலும் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது எனக் கல்வி அமைச்சு பொது நிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் அதிகாரிகள் ஆசிரியர் தொழிற் சங்கங்களிடம் உறுதியளித்துள்ளன என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி கல்வி அமைச்சில் கல்வி, நிதி, பொது நிர்வாக அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கும். ஜாதிக குரு சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இஸ்லாமி ஆசிரியர் சங்கம், பட்டதாரி ஆசிரியர் சங்கம், யுனைட்ரட் ஆசிரியர் சங்கம் ஆகிய சங்கங்களின் பிரதி நிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தையின் போது மேற்படி உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் இ. த. ஆ. சங்கப் பிரதி நிதிகளாக பத்திரிகைச் செயலாளர் திரு. எஸ். கே. சதாசிவம், துணைப் பொதுச் செயலாளர் திரு. ஆ. அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது ஆசிரியர்சங்கங்களுக்கு மேற்படி மூன்று அமைச்சு அதிகாரிகளும் ஆசிரிய சேவையையும் ஆசிரியர்களை உள்வாங்கும் வேலையையும் புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்தும் வேலையையும் பின்வரும் நேர அட்டவணையின் அடிப்படையில் செய்வதாக உறுதியளித்தனர்.

★ 31-01-1995இற்கு முன்னராக சம்பளம் மாற்றி அமைக்கும் முறை தொடர்பான சுற்று நிருபத்தை சகல மாகாண, மாவட்ட, கோட்ட அலுவலகங்களுக்கும் கல்வி உயர்கல்வி அமைச்சு அனுப்பி வைத்தல்.

★ பெப்ரவரி 95 முடிவதற்கு முன்னர் சகல ஆசிரியர்களினதும் சம்பள மாற்றி அமைப்புக் கடிதங்களை ஆசிரியர்களுக்கும் சம்பந்தப்பட்ட கிளைகளுக்கும் அனுப்பிவைத்தல். (ஒ)

### தமிழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் பல முறைகேடுகள் ஊழல் இடம் பெற்றுள்ளதால் அது குறித்து ஆராய விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று மாநில காங்கிரஸ் கட்சி கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது (உ-4)

### அமைச்சரவை மாற்றம் இவ் வாரம்

புதுடில்லி, ஜன. 3

இந்திய அமைச்சரவையை இவ்வார இறுதியில் மாற்றியமைக்க பிரதமர் ராவ் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவையில் இருந்து வெளியேறியுள்ள மூத்த உறுப்பினர்களான அர்ஜுன்சிங், என். ரி. திவாரி ஆகியோரின் இடங்களுக்கு புதியவர்களை புத்தாண்டுடன் நியமிக்க பிரதமர் ராவ் முடிவு செய்திருந்தார்.

எனினும் அது பின்னர் கைகூடவில்லை.

இவ்வார இறுதியில் மாற்றத்தை அவர் மேற்கொள்வார் எனத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

### செஞ்சிலுவை தொண்டர்கள் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். ஆஸ்பத்திரியில் சேவையாற்றி வரும் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரிவுகளைச் சேர்ந்த தொண்டர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் தங்கள் சேவையை நிறுத்தியுள்ளனர்.

தமது சேவையை அவமதிக்கும் வகையில் நடந்த சில சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் சேவையை நிறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, தமிழீழ காவல்துறை, தமிழீழ நிர்வாகசேவை ஆகியவற்றுக்கு தொண்டர்கள் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

(ஜ-15)

### பல்கலைக்கழக இயந்திரம் உடைந்தது

யாழ். பல்கலைக்கழகத்துக்கெனக் கொண்டு வரப்பட்ட ''போட்டோ ஸ்ரற்'' இயந்திரம் கொழும்பில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்ட போது தவறி விழுந்து உடைந்து நொறுங்கிவிட்டது

கடந்த 24 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நின்ற 'மாஹேறா' கப்பலில் பல்கலைக்கழகத்துக்கான பொருள்கள் ஏற்றப்பட்ட வேளையில் ''போட்டோ ஸ்ரற்'' இயந்திரம் மற்றும் சில மின்சாதனங்கள் கொண்ட பெட்டி தவறி வீழ்ந்ததால் அவை உடைந்து சுக்கு நூறாகியதாக தெரிவிக்கப்பட்டது. அவற்றின் பெறுமதி சுமார் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபா என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தப் பணத்தை நஷ்டஈடாகத் தருமாறு பல்கலைக்கழக நிர்வாகம் துறைமுக அதிகாரசபையிடம் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ-3)

# ஆந்திர மாநிலத்தில் 2 ரூபாவுக்கு அரிசி!

## ராமராவ் ஆரம்பித்து வைத்தார்

ஆந்திரப் பிரதேச முதல் அமைச்சர் என். ரி. ராமராவ் இரண்டு ரூபாவுக்கு (இந்திய ரூபா) ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை நேற்று ஹைதராபாத்தில் ஹண்டகட்டா என்னும் சேரிப் பகுதியில் தொடக்கி வைத்தார்.

ஐம்பது வயது விதவை ஒருவருக்கு முதல் அமைச்சரே தமது கையால் ஒரு கிலோ அரிசியை நிறுத்துக் கொடுத்தார்.

இந்த மானிய உதவித் திட்டத்தின் கீழ் 6,000 ரூபாவுக்கும் குறைவாக ஆண்டு வருமானம் உடைய வெள்ளை அட்டை வைத்திருப்போருக்கு மாதம் ஒன்றுக்கு 25 கிலோ அரிசி 2 ரூபா விலைக்கு வழங்கப்படும்.

ஆந்திரப் பிரதேசத்தில் சுமார் ஒரு கோடி குடும்பங்களுக்கு வெள்ளை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் நடப்பு நிதி ஆண்டில் மாநில அரசுக்கு 731 கோடி ரூபா செலவாகும். (இ-க)

## மாநிலத் தேர்தல்களில் தேசிய முன்னணி போட்டி

புதுடில்லி, ஜன. 3

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறும் 4 மாநிலத் தேர்தல்களிலும் தேசிய முன்னணி போட்டியிட முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய முன்னணித் தலைவர் வி. பி. சிங் இது சம்பந்தமாக கட்சிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாகவும்—

நரசிம்மராவ் அரசுக்கு எதிராக பெரும் சக்தி ஒன்றை உருவாக்க அவர்கள் முயல்வதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடந்த தேர்தல்களின்போது நரசிம்மராவ் அரசுக்கு கிடைத்த தோல்வி முன்னணி புத்துயிர்பெறக் காரணம் என இந்தியப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன. (இ-3)

# சோமாலியாவில் மீண்டும் கடும் சண்டை மூண்டது!

## ஐ.நா.படைவாபஸ் ஆரம்பம்

சோமாலியாவில் மீண்டும் போட்டிக் குழுக்களிடையே கடும் சண்டை மூண்டுள்ளது.

சோமாலியாவில் நிலை கொண்டிருந்த ஐ. நா அமைதி காக்கும் படைகள் சோமாலியாவில் இருந்து வெளியேற ஆரம்பித்ததை அடுத்து சண்டை ஆரம்பித்துள்ளது.

ஐ. நா. சமாதானப் படைகள் எதிர்வரும் மார்ச் மாதம் முற்றாக வெளியேறிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியாவில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இரு போட்டி ஆயுதக் குழுக்களிடையே சண்டை மூண்ட போது முதலில் அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட்டது.

போட்டி ஆயுதக்குழுக்களில் ஒன்றான முகம்மட் ஐடீட் தலைமையிலான குழுவினர், அமெரிக்கப் படைகள் மீதும், ஐ. நா. படைகள் மீதும் தாக்குதலை நடத்தியதால் முதலில் அமெரிக்கப்படைகள் வெளியேறின. தற்போது ஐ. நா. படைகள் வெளியேற ஆரம்பித்துள்ளன.

சோமாலியாவில் அமெரிக்காவினதும், ஐ. நா. வினதும் தலையீடு தோல்வியில் முடிவடைந்துள்ளது. (இ)

### 80 பேர் பலி

புத்தாண்டு தினத்தன்று பங்களூரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் எண்பது பேர் பலியானார்கள் என்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

(அ)

## வீரப்பன் தற்கொலை என பத்திரிகைகளில் செய்தி

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் தற்கொலை செய்துள்ளதாக இந்தியப் பத்திரிகைகள் சில நேற்று செய்திகளை வெளியிட்டன.

'ஏசியா எரிட்' என்ற சஞ்சிகை இதழ் இந்தச் செய்தியை கட்டம் கட்டி வெளியிட்டிருந்தது.

காட்டுப்பகுதியிலிருந்து பல சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும்—

அவற்றில் வீரப்பனின் சடலமும் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

### நீர் இறைக்கும் இயந்திரங்கள்

உடுப்பிட்டி ப. நோ. கூ. ச. ''றொபின்'' நீர் இறைக்கும் இயந்திரங்களை கொழும்பு விலைக்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது.

### புலிகளின் குரல் வானொலியில்

**03 — 01 — 1995**

**செவ்வாய் இரவு**

★ 8-01— தாயகப் பாடல்கள்
★ 8-20 — ஏர்முனை— ''சிந்தித்து விவசாயம் செய்யின் சிக்கனமாய் நீரைப் பேணலாம்'' தனிநடிப்பு
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிந்துகொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**04 — 01 — 1995**

**புதன் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### தமிழீழ வானொலி

**செவ்வாய் மாலை ஒலிபரப்பு**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-20 — இவ்வாரம் இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — தமிழீழ கானங்கள்
★ 6-30 — இன்றைய ஒலிபரப்பு யாவும் நிறைவு பெறும்.

### 2,000 பைக்கற் திரிபோஷ மா

கொழும்புத்துறை, ஜன. 3

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு அண்மையில் கப்பல் மூலம் 2 ஆயிரம் பைக்கற் திரிபோஷ மா கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள சகல சிறுவர் நல சிகிச்சை நிலையங்களுக்கும் அரசினர் வைத்தியசாலைகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் கிளினிக்குகளுக்கும் இந்த திரிபோஷ மா பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (ஒ-30)

### கூ. மொ. வி கார்கொள்வனவு மோசடி

கொழும்பு, ஜன 3

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் கூ. மொ. விற்பனை நிறுவனத்தின் கார்க் கொள்வனவில் மோசடிகள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1993 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 100கார்களை 2கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்ததிலேயே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது. (க-3)

### ஏற்பு தடுப்பு ஊசி மருந்து இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பு தடுப்பு ஊசி மருந்து கையிருப்பில் தற்போது இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பிலிருந்து கப்பல் மூலம் ஏற்பு தடுப்பு ஊசி மருந்து வந்து சேர்ந்த பின்பே வைத்தியசாலைகளுக்கு விநியோகம் நடைபெறும் என்று அறியப்படுகின்றது. (க-135)

### சீதனத்துக்கு எதிரான வாசகங்கள்

வடமராட்சி, ஜன. 3

சீதனத்துக்கு எதிரான வாசகங்கள் கொண்ட விளம்பரப்பலகைகள் வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரதான வீதிச் சந்திகளில் நடப்பட்டுள்ளன. (க-173)

## தமிழீழ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

**யாழ்ப்பாணம்**
யா/யா

| | | |
|---|---|---|
| 186 | 323 | 725 |
| 743 | 764 | 1974 |
| 2377 | 4697 | 4938 |

**கோப்பாய்**
யா/கோ

| | | |
|---|---|---|
| 84 | 88 | 284 |
| 301 | 859 | 1833 |
| 2794 | 5061 | |

**உடுவில்**
யா/உ

| | | |
|---|---|---|
| 35 | 350 | 480 |
| 1191 | | |

**மானிப்பாய்**
யா/மா

| | | |
|---|---|---|
| 156 | 294 | 641 |
| 1673 | 3167 | 3271 |
| 3821 | | |

**தெல்லிப்பளை**
யா/தெ

| | | |
|---|---|---|
| 33 | 38 | 449 |
| 458 | 764 | 830 |
| 3502 | 4184 | |

**சங்கானை**
யா/ச

| | | |
|---|---|---|
| 14 | 723 | 1901 |
| 2335 | 3177 | 3494 |
| 3731 | 3792 | 4213 |

**காரைநகர்**
யா/கா

| | | |
|---|---|---|
| 4[illegible] | | |

**வேலணை**
யா/வே

| | | |
|---|---|---|
| 20 | 231 | 709 |
| 718 | 1282 | 1702 |

**கரவெட்டி**
யா/க

| | | |
|---|---|---|
| 03 | 230 | 358 |
| 371 | 756 | 1459 |
| 2248 | 3601 | 3884 |
| 4748 | | |

**பருத்தித்துறை**
யா/ப

| | | |
|---|---|---|
| 868 | 921 | 974 |
| 1412 | 2395 | 2791 |
| 3839 | 3967 | |

**வடமராட்சி கிழக்கு**
யா/வ.கி

| | | |
|---|---|---|
| 780 | 872 | |

**சாவகச்சேரி**
யா/சா

| | | |
|---|---|---|
| 117 | 714 | 1034 |
| 2945 | 3106 | 3489 |
| 3623 | 4405 | 4365 |
| 4561 | 5618 | 6525 |
| 6876 | | |

**பச்சிலைப்பள்ளி**
கி/ப

| | | |
|---|---|---|
| 438 | | |

**வெளியகல்வு**
யா/வெ

| | | |
|---|---|---|
| 18 | 323 | 763 |

[உ-ஜ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அண்ணாமலை நல்லம்மா

காரைநகர் புதுறோட் சந்தியைச் சேர்ந்த திருமதி அண்ணாமலை நல்லம்மா 2-1-95 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு அண்ணாமலையின் அன்பு மனைவியும், ஒப்பிலாமணியம் (காரைநகர் ப.நோ.கூ.ச), பரஞ்சோதி, ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளியம்மை, சட்டநாதன், பாலசுப்பிரமணியம், சிவப்பிரகாசம் (முகாமையாளர் காரைநகர் ப நோ. கூ.ச) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி பொன்னம்பலம், திருமதி ஞானரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை, அவுஸ்திரேலியா), திருமதி காங்கேசு (இளைப்பாறிய அதிபர், லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோரஞ்சிதம் (சுவிஸ்), சிறீஸ்கந்தராசா (சுவிஸ்), ரேவதி, நடேசரூபன், நடேசலிங்கன், வசந்தா, சத்தியநாதன் (பிரான்ஸ்), சறோஜாதேவி (பிரான்ஸ்), கருணாவதி (மாணவி, யாழ் பல்கலைக்கழகம்), வனஜா (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), இராசேந்திரம் (கொழும்பு), செந்தில்நாதன், அரிகரன் (மாணவன் யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தர்சனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அலுக்கைச் சந்தி, அளவெட்டி தெற்கு அளவெட்டியில் நடைபெற்று, பூதவுடல் இன்று 3-1-95 செவ்வாய்க்கிழமை பகல் 10 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
சி. அரிகரன்
[பேரன்]

அலுக்கைச் சந்தி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

[34495]

## சின்னையா இரத்தினம்

(சாவகச்சேரி பிரபல வெற்றிலை வியாபாரி)

சாவகச்சேரி பிரபல வெற்றிலை வியாபாரியான சின்னையா இரத்தினம் அவர்கள் 01-01-95 ஞாயிற்றுக்கிழமை இரவு 11-25க்கு காலமானார். அன்னார் காலம் சென்ற சின்னையா நாகம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் காலம் சென்ற காரைநகர் பெயின்ரர் வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் இரவீந்திரநாதன் (யாழ். இந்துக்கல்லூரி- -பௌதிகவியல் ஆசிரியர்), யோகராணி, மோகனி (கனடா), இரகுநாதன் (டென்மார்க்), யோகநாதன் (சாவகச்சேரி நகரசபை மின்பகுதி), லோகநாதன் (டென்மார்க்), கலாதேவி, செல்வநாதன் (கனடா), தில்லைநாதன் வெற்றிலைக்கடை, சாவகச்சேரி), ஈஸ்வரநாதன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இந்திரா, அருளானந்தம் (இ. மி. சபை யாழ்.), இந்திரகுமாரன் (கனடா), செல்வேஸ்வரி (டென்மார்க்), கலாநிதி, அருந்ததி (டென்மார்க்), சிறிஸ் கந்தராஜா (சாரதி), சிவாஜினி (கனடா), தங்கமலர், தர்மசிறி ஆகியோரின் அன்பு மாமனாரும் மேனகா, அனந்திகா, கீர்த்தனா, யதீசன், துஷ்யந்தன் பிரதீபன், மாதுமை, சங்கீத்தா, கஜேந்திரன், சர்மிலா, பவித்திரன், அபிரா, நிஷல்யா, கஜித், ஆர்த்திகா, செந்தூரன், சஞ்சீபன், அகிலா, அஜந்தா, சாரங்கன், ஜனனி, தட்சாயினி, ஆகியோரின், அன்புப் பேரனும் இராசம்மா, மாணிக்கம், காலஞ்சென்ற முத்துப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் குமரகுரு, வயிரவநாதன், செந்தில்நாதன், ஜெயமணி, தனலட்சுமி, காலம் சென்றவர்களான கந்தசாமி, சபாரத்தினம், முத்துக்குமாரு ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலம் சென்ற கல்வியங்காடு சுப்பையா, நாகம்மா தம்பதிகளின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(03-01-95 செவ்வாய்க்கிழமை காலை10மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பெருங்குளம் பிள்ளையார் கோவிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(34490)

## கந்தமுத்து குமாரசாமி

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியைப் பிறப்பிடமாகவும், மலேஷியா கோலாலம்பூரை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய கந்தமுத்து குமாரசாமி 12-12-94 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், அன்னமுத்துவின் மைத்துனரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தமுத்து - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஏரம்பு தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களாகிய நடராசா, நாகம்மா, கயிலாயபிள்ளை, சிவசிதம்பரம் (தெய்வேந்திரம்) ஆகியோரின் சகோதரரும், திருஞானம், தவனேஸ்வரி, செல்வராணி, நடராசசிங்கம், இராசேஸ்வரி, தவராசசிங்கம் ஆகியோரின் தந்தையும், குகநேசன், மீனாம்பாள், சிவலோகநாதன், இராசேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பெரியதகப்பனாருமாவார்.

இறுதிக் கிரியைகள் கோலாலம்பூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. திருஞானம்.
(மகன்)

மாவடி, வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(34492)

## கந்தையா இளையதம்பி

(அதிபர், கைதடி நுணாவில் த. க. பாடசாலை)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கைதடி நுணாவில் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் கந்தையா இளையதம்பி 2 - 1 - 95 அன்று காலமானார்.

இவர் மின்னல்கொடி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், தயாபரனின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (கொக்குவில்), பொன்னையா (வர்த்தகர் — மட்டுவில்), காலஞ்சென்ற தம்பையா, அன்னமுத்து, சரவணமுத்து (ஓய்வுபெற்ற இலிகிதர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி (வைமன் — றோட் யாழ்ப்பாணம்), சிவபாக்கியம் (நல்லூர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. சரவணமுத்து
(சகோதரன்)

(34498)

### பரந்தன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துச் செய்யமுடியாதவாறு மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் இது குறித்து பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்தேதார் எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஏற்பாட்டில் வீதித் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

(ஐ-3-4)

### இன்றைய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் முக்கிய இடத்தை வகிப்பர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வரும் — இராணுவ முகாமை பின்னே நகர்த்தி பூநகரிப் பாதையைத் திறக்கும் — திட்டத்துக்கு அரசுத் தரப்புக்குழு இணங்கும் என்றும் —

பாப்பரசரின் விஜய காலத்தில் வடபகுதி மக்கள் இப்பாதை ஊடாகச் செல்லக் கூடியதான இணக்கம் ஒன்று ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அகதிகளை மீளக்குடியமர்த்தல், வடக்கு — கிழக்கு புனரமைப்பு ஆகியவை தொடர்பாக கொள்கை ரீதியான இணக்கம் இன்றைய பேச்சுக்களில் காணப்படக்கூடும்.

கடல் வலயத் தடையை நீக்குவது குறித்தும் இருதரப்பினரும் பேச்சு நடத்துவர். அரசுத் தரப்பில் இடம்பெற்று வரும் கடற்படை அதிகாரி இந்த விடயத்தில் முக்கிய பங்கு வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-ஐ-4-6-9)


**P' NEW SCIENCE CENTRE**
(எழிலகம் முன் யாழ்ப்பாணம்)

**95 A/L**
மீட்டல்

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி வகுப்புக்கள் ஆரம்பம்

**03 · 01 · 1995**
செவ்வாய்

விலங்கியல் செவ் 4 p m
திரு ஈஸ்வரதாசன்
B.Sc (Cey.) Dlp. In Ed.

பௌதிகவியல்
வியா. 5 p.m.
திரு. ஜெயசீலன்
B.Sc. (Hons)

இரசாயனவியல்
வெள்ளி 4 p.m.
திரு. செல்வா
B.Sc. (Hons)

தாவரவியல் திங். 4.pm.
திரு. பாலா

தூய.-பிரயோக கணிதம்
திங்கள் 4 p.m
திரு குணசிங்கம்
B Sc. (Hons)

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

(சி-10150)



**SCIENCE COLLEGE**
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
By
**MR. BRITTO**

★ G. C. E. A/L சித்தியடைந்தவர்களுக்கும்,
★ G. C. E. O/L பரீட்சை எடுத்தவர்களுக்கும்

உகந்தமுறையில் இலகு ஆங்கிலப் பேச்சு, இலக்கண வகுப்பு

ஆரம்பம்:
**04 · 01 · 95**
புதன் பி. ப. 5-30

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன. நேர அட்டவணையை நிறுவனத்தில் பெறவும்)

(சி-101)


### இரண்டாம் கட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் கழித்து இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

இரண்டாம் சுட்டப் பேச்சுக்காக அரசுத் தரப்பின் தூதுக்குழு யாழ். வருவது பற்றிய அரசின் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் நேற்று மாலையே, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக புலிகளின் கைக்குக் கிடைத்தது எனத் தெரிய வருகின்றது

இன்றைய பேச்சுக்களின் போது மோதல் தவிர்ப்பு (Cessation of Hostilities), அதன் பின்னர் யுத்தநிறுத்தம் (Cease Fire) ஆகியவற்றைக் கடைப்பிடிப்பது சம்பந்தமான ஒழுங்கு முறைகள், வழிமுறைகள் பற்றியே முக்கியமாக ஆராயப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

முதற்கட்டமாக இரு வாரங்களுக்கு மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்கவும் —

பின்னர் அதனை யுத்த நிறுத்தமாக விஸ்தரிக்கவும்—

இணக்கம் காண்பது குறித்து இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்பின்பேரில்—

மோதல் தவிர்ப்பு குறித்து அரசு தரப்புப் பிரதிநிதிகள் குழு இப்பேச்சுவார்த்தைகளின் போது அறிவிக்கும் என ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்த நிறுத்தம் பற்றிய பிரகடனத்தை அரச தரப்பினர் முதலில் வெளியிடுவர் என்றும் —

பின்னர் அதனை ஏற்று புலிகள் அறிவிப்பு விடுப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-ஐ-4-6-9)

### அன்றாடப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு, முதற் கட்டப் பேச்சுக்களின் முடிவில் இணக்கம் கண்ட ஸ்ரீலங்கா அரசுத் தரப்பினர்—

பின்னர் அதிலிருந்து பின் வாங்கி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து நேரடியாகப் பேச முயற்சித்ததும்—

அதனால் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாவது தாமதமானதும் தெரிந்தவையே.

முதலில் இணக்கம் கண்டபடி —

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தே முதலில் ஆராய வேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தீர்க்கமாக இருந்ததை அடுத்து —

அரசுத் தரப்பு வேறு வழியின்றி தன்னுடைய முன்னைய வாக்குறுதியைப் பின்பற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டனர்.

(உ)


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, சமீபத்தில் முற்றிலும் புதுக்கித் திருத்தப்பட்ட நிலையில் உள்ள, 'ஒக்ஸ்போர்ட்'' (ஒரிஜினல்)டீசல் கார் விற்பனைக்கு உண்டு.

212/1, கோயில் வீதி,
(கைலாச பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக)
நல்லூர். (சி/10145)


## 31 -ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**செல்லம்மா கணபதிப்பிள்ளை**
அவர்களின்
**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு**

**08-12-94**. அன்று இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தாயாரின் இறுதிச் சடங்கின் போது நேரில் கலந்துகொண்டும், மலர் வளையங்கள் சாத்தியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் வேறு வகையிலும் எமக்கு உதவியும் ஆறுதலுமாக இருந்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் **06-01-95** அன்று காலை **6.00** மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி கிரியைகளிலும் **07-01-95** அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும், பங்கு பற்றி சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

85/22, யாவத்தை காடின்,
கொழும்பு- 5

தகவல்:
க. செல்வராஜா
(மகன்)

(8177)

# மரண அறிவித்தல்

## திருமதி பவானி (பூபதி) கந்தசாமி

(நயினாதீவு)

திருமதி பவானி கந்தசாமி 01—01—1995 அன்று நயினாதீவில் காலமானார்.

இவர் வ. க. கந்தசாமி (வர்த்தகர்) அவர்களின் பாசமிக்க மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தவமலர் இராசசூரியர் (சண் றைஸ் சாவகச்சேரி), சந்திரமலர் (U K.), கணநாதன், உதயமலர் (கனடா), வனிதமலர் (கனடா), கமலநாதன் (கனடா), ஞானமலர் (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சபாநாதன் (வர்த்தகர்), கலாராணி விக்னேஸ்வரன் (U.K.), ஜெகதீசன் (சுவிஸ்), தவவிநாயகன் (கனடா), தவமணிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆராதனா, நிமலன், சங்கீதா, புருசோத்தமன், தர்சினி, மிலானி, பிரணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4.1.95 அன்று நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மா. குமரையா
[மைத்துனர்]

[illegible]
கண்டுக்குளி.

(34502)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து நமசிவாயம்

(மலாயன் பென்சனர்)

கைதடி கிழக்கைச் சேர்ந்த சரவணமுத்து நமசிவாயம் (இரத்தினம்) காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ந. சரவணமுத்து, திருமதி வேதநாயகம் ஆகியோரின் ஏகபுதல்வனும், அன்னம்மாவின் அன்புக்கணவரும், திருமதிகள் தங்கராசா இராஜேஸ்வரி, இராசையா விக்னேஸ்வரி, நாகேஸ்வரன் பூரணேஸ்வரி (புத்தூர்), சண்முகராசா புவனேஸ்வரி, கமலநாதன் கெங்கேஸ்வரி (கனடா) ஆகியோரின் பெரியதந்தையும், தர்மினி, பிரதீபன் (லண்டன்), பிரபாகரன்(லண்டன்), பிரகாஸ்னி, கிரிஜா, கிரிதரன் (லண்டன்), இந்துஜா, சுதர்சனன் (லண்டன்), வாகினி, லவன், லறஞ்சி, கிர்ஷன் (கனடா), அபிலேஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (1995 - 01 - 03) செவ்வாய்க்கிழமை மு. ப. 10.00 மணியளவில் நடைபெறுமெனவும் பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கைதடி ஊற்றலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படுமெனவும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தயவுடன் அறியத் தருகிறேன்.

தகவல்:
செல்லப்பா தங்கராசா
(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்
உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவை)

''அமுதசுரபி''
கைதடி கிழக்கு,
கைதடி.

(34493)

## வாரித்தம்பி கந்தையா

குரும்பைகட்டி புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்தவரும் காலஞ்சென்ற வல்லியப்பர் வாரித்தம்பியின் ஏக புதல்வருமாகிய வாரித்தம்பி கந்தையா நேற்று (02-01-95) காலை 9-30 மணிக்கு காலமானார்.

இவர் முருகுப்பிள்ளை மகேஸ்வரி (U K), இராஜேந்திரம் (இளைப்பாறிய நில அளவையாளர், சவூதி அரேபியா), காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா, வேலும்மயிலும் (முன்னாள் பருத்தித்துறை நகரசபை எழுதுவினைஞர், U K), மகேந்திரன் மதுவரி திணைக்களம், கிளிநொச்சி), சபாரத்தினம் (மேற்கு ஜேர்மனி), நாராயணசாமி (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை, திருகோணமலை), உதயமூர்த்தி (Norway) ஆகியோரின் தந்தையும், சோ. முருகுப்பிள்ளை (U K), இ. ஜெயலட்சுமி, வே. இந்திராணியம்மா, ம. கமலாவதி (தாதியர், மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு), ச. குணமகள் (மேற்கு ஜேர்மனி), நா. இந்திராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல்கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
இ. சுஜேந்திரன்

க. மகேந்திரன்,
கிணற்றடி வைரவர் கோவிலடி,
குரும்பைகட்டி,
பருத்தித்துறை.

(8176)

## திருமதி அன்னம்மா ஆசீர்வாதம்

திருமதி அன்னம்மா ஆசீர்வாதம் 02- 1- 95 இல் (நேற்று) காலமானார். இவர் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை ஆசீர்வாதம் (செல்லத்தம்பி) அவர்களின் அன்பு மனைவியும், சிங்கராயர் (இராசரத்தினம்), கிறேஸ் திரேசம்மா, அருளப்பு (முத்துராசா), றீற்றம்மா (பூமணி), பீற்றர், சிசிலியா (பபா), மரியநாயகம் (சக்கிறிஸ்ரன் யாழ். பேராலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்மணி, சாமுவேல் பெஞ்சமின் (ஒப்பனையாளர்), இருதயம் செபமாலை (மரவேலை ஒப்பந்தக்காரர்), லோகநாயகி, மோசஸ் தார்சியஸ் (இளைப்பாறிய ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தலைவர், யாழ். கொமிசியம் மரியாயின்சேனை), யேசுவின்சிறியபுஸ்பம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற லூக்காஸ், ஆசீர்வாதம் ஆசைப்பிள்ளை, காலஞ்சென்ற பிலிப்பாச்சி, ஐயாத்துரை-செபமாலை, ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (3-1-95) பிற்பகல் 3.30 மணிக்கு இல 39, மத்தியூஸ் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மோ. தார்சிசியஸ்
[மருமகன்]

S.M. மரியநாயகம்,
12/10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[34499]

## கந்தையா சிவபாதம்

(ஓய்வுபெற்ற நிறைவேற்று அலுவலர் - நல்லூர் V.C.)

வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் கந்தர்மடம் அன்னசத்திரலேனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதம் நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா, வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகரட்ணம், நவபாக்கியத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ராசம்மா, காலஞ்சென்ற அன்னம்மா, கமலம்மா ஆகியோரின் சகோதரரும், பாலசிங்கம் [கனடா], பொன்னம்பலம் [சின்னராசா], பாலசுப்பிரமணியம் [லண்டன்], மகாலட்சுமி, சோதீஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சத்தியலெட்சுமியின் அன்புக் கணவரும், இதயராஜன் (கனடா), இராஜேந்திரன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரஞ்சனா (ராகினி), யாழினி ஆகியோரின் மாமனாரும் கிரிசிகா, நிதுசன், சாயீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து 3 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சத்தியலட்சுமி
(மனைவி)

20, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(34501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.